# தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

## அவசரக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2–ஆம் தேதி திங்கள்கிழமை காலை 10. 30 மணிக்கு 2008–ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. தூத்துக்குடி வட்டாட்சியரின் 25–2–2009ஆம் தேதிய ந.க அ2. 3928/2009ஆம் எண் கடிதத்தில் தமிழக அரசின் சிறப்பு திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டு மனைப் பட்டா வழங்க ஆட்சேபணையில்லை என தீர்மானம் நிறைவேற்றித் தரக் கோரப்பட்டுள்ளது.

வஎண் I. திரேசபுரம் தெரு 1. வார்டு 4, பிளாக் 50 நகரளவு எண் 5907/6
2. வார்டு 4, பிளாக் 50 நகரளவு எண் 5907/8
3. வார்டு 4, பிளாக் 50 நகரளவு எண் 5907/10
4. வார்டு 4, பிளாக் 50 நகரளவு எண் 5907/12

II. டூவிபுரம் 5வது தெரு டவுண் வார்டு 4, பிளாக் 26, நகரளவு எண் 3751
III. டூவிபுரம் 2வது தெரு டவுண் வார்டு 4, பிளாக் 23C, நகரளவு எண் 3540
IV. டூவிபுரம் 5வது தெரு டவுண் வார்டு 4, பிளாக் 31, நகரளவு எண் 4044
V. டூவிபுரம் 6வது தெரு டவுண் வார்டு 4, பிளாக் 27, நகரளவு எண் 3801/2

மேற்குறிப்பிட்ட வரிசை எண் I முதல் V வரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நகரளவு எண்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடங்கள் G.R. நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ளது. எனவே அரசாணையில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளுக்கிணங்க மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் வீடுகள் கட்டி ஐந்து வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வரும் ஆக்கிரமிப்பு தாரர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க இம்மாமன்றத்திற்கு ஆட்சேபணையில்லை எனத் தெரிவிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:** மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளின்படி ஆட்சேபனையில்லா சான்று வழங்க அனுமதிக்கலாம்.

ஜி1. 9357/07

**தீர்மானம் எண்: 73**

அலுவலகக் குறிப்புபடி ஆட்சேபணையில்லா சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது.

2. தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட போல்பேட்டை பகுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் ‘D ‘ வார்டு எண் 4 பிளாக் எண் 32A, நகரளவு எண் 4131/2 A2 (பரப்பளவு 503. 5 ச. மீ) நகரளவு எண் 4131/2 A 3A (பரப்பளவு 195 ச. மீ) 4131/3 (பரப்பளவு 1157 ச. மீ ) ஆக மொத்தம் பரப்பளவு 1855. 5 ச.மீ இடத்தினை தொழிற்சாலை நில உபயோகமாக உள்ளதை கல்வி நில உபயோக பகுதியாக மாற்றம் செய்யக்கோரி திருத்திய வரைபடங்களுடன் திரு பி. ஜீவன் ஜேக்கப் ராஜேந்திரன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி இடத்தில் கீதா மெட்ரிகுலேசன் பள்ளிக்கூடம் இயங்கி வருவதால் போல்பேட்டை வார்டு 4, பிளாக் எண் 32A, நகரளவு எண் 4131/2 A2 (503. 5 ச. மீ) 4131/2 A 3A ( 195 ச. மீ) 4131/3 ( 1157 ச.மீ) ஆக மொத்தம் பரப்பளவு 1855. 5 ச.மீ உள்ள இடத்தினை ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் ‘D ‘ இல் தொழிற்சாலை உபயோக பகுதியாக உள்ளதை கல்வி நில உபயோகமாக மாற்றம் செய்ய பரிந்துரை செய்து உரிய கருத்துருவினை தூத்துக்குடி உள்ளூர்த்திட்டக்குழுமம் வழியாகவும், சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் வழியாக சென்னை அரசு செயலர் நகர்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித் துறையின் அனுமதி பெற அனுப்பி வைக்க வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** திருத்தம் செய்யப்பட்ட கருத்துருவினை அனுமதி பெற வேண்டி அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்,

எப்1. 24110/2007

**<u>தீர்மானம் எண்: 74</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.
அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது.

3, தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட போல்பேட்டை பகுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் ‘D ‘ வார்டு எண் 4, பிளாக் எண் 32 A நகரளவு எண் 4132/2 A2 (பரப்பளவு 837. 76 ச. மீ) மற்றும் நகரளவு எண் 4132/2 A 1B ( பரப்பளவு 583 ச. மீ ) இடத்தினை தொழிற்சாலை நில உபயோக பகுதியாக உள்ளதை கல்விநில உபயோக பகுதியாக மாற்றம் செய்யக்கோரி திருத்திய வரைபடங்களுடன் மனுதார் பெரியசாமி கல்வி அறக் கட்டளை மானேஜிங் டிரஸ்டி செயலாளர் திரு பி. ஜீவன் ஜேக்கப் ராஜேந்திரன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி இடத்தில் பல வருடங்களாக பொ. தங்கம்மாள் நினைவு நடுநிலைப் பள்ளி இயங்கி வருவதால் போல்பேட்டை வார்டு 4, பிளாக் எண் 32 A நகரளவு எண் 4132/2 A2 (பரப்பளவு 837. 76 ச. மீ) மற்றும் நகரளவு எண் 4132/2 A 1B ( பரப்பளவு 583 ச. மீ ) ஆக மொத்தம் பரப்பளவு 1420. 76 ச.மீ இடத்தினை ஒப்புதலளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் ‘D ‘ இல் தொழிற்சாலை உபயோகப்பகுதியாக உள்ளதை கல்வி உபயோக பகுதியாக மாற்றம் செய்ய பரிந்துரை செய்து மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று உரிய கருத்துருவினை உறுப்பினர் செயலர் உள்ளூர்த் திட்டக் குழுமம் , தூத்துக்குடி மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை வழியாக அரசு செயலர், நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித்துறை, சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து விண்ணப்பதாரரின் உத்தேசத்தினை உரிய அனுமதி பெற வேண்டி அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** தொழிற்சாலை உபயோகப் பகுதியாக உள்ள நிலத்தை கல்வி உபயோகமாக மாற்றம் செய்ய சமர்ப்பித்த விண்ணப்பத்தினை உறுப்பினர் செயலர் உள்ளூர்த் திட்டக்குழுமம், தூத்துக்குடி வழியாக அரசு செயலர், நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித்துறை, சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துருவினை அனுப்பி அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 24111/2007

**<u>தீர்மானம் எண்: 75</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் அமைந்துள்ள மின் கம்பம் பழுதடைந்துள்ளதாலும், மின் இணைப்புகள் அதிகளவில் இணைக்கப்பட்டுள்ளதாலும் மேற்படி மின் கம்பம் மற்றும் மின் இணைப்புகளை மாற்றியமைத்துத் தருமாறு மேற்படி பகுதிவாழ் மக்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

பொதுமக்கள் நலன் கருதி மேற்படி மின் கம்பம் மற்றும் மின் இணைப்புளை மாற்றியமைப்பதற்கு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டுத்தொகைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்

இ3. 25370/08

**தீர்மானம் எண்: 76**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.

மாமன்றம், தூத்துக்குடி.
நாள் **27–02–2009**

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி